Registered Office
"Maithri",
No. 132, Cathedral Road,
Chennai 600 086,
India.
CIN: L63011TN2004PLC054948

Tel: 91 44 2811 2472
Fax: 91 44 2811 2449
URL; www.ranegroup.com

# Rane Brake Lining Limited

**//Online Submission//**

RBL/SE/24/2020-21

August 06, 2020

| | |
|---|---|
| **BSE Limited**<br>Listing Centre<br>Scrip Code: **532987** | **National Stock Exchange of India Ltd.**<br>NEAPS<br>Symbol: **RBL** |

Dear Sir / Madam,

**Sub: Newspaper publication of Unaudited Financial Results – Regulation 47 of SEBI LODR**

We hereby enclose copies of extract of the unaudited financial results of the Company for the quarter ended June 30, 2020 (UFR) published on August 06, 2020, in the newspapers, viz., 'Business Standard' (English) and 'Dinamani' (Regional language).

We request you to take the above on record and note the compliance under relevant provisions of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR).

Thanking you.

Yours faithfully,

For **Rane Brake Lining Limited**

VENKAT RAMAN
Digitally signed by VENKATRAMAN
Date: 2020.08.06 13:15:45 +05'30'

**Venkatraman**
Secretary

Encl: a/a

Newspaper: Dinamani
Language: Tamil (Regional)
Edition: Tamil Nadu
Date of publication: August 06, 2020



# ரூ.42 ஆயிரத்தைத் தாண்டியது ஆபரணத் தங்கம்



**சென்னை, ஆக. 5:** சென்னையில் புதன்கிழமை ஆபரணத் தங்கம் பவுன் ரூ.42 ஆயிரத்தை தாண்டி, வரலாறு காணாத புதிய உச்சத்தைத் தொட்டது. பவுனுக்கு ரூ.976 உயர்ந்து, ரூ.42,592-க்கு விற்பனை செய்யப்பட்டது.

நிகழாண்டில் ஜனவரி 3-ஆம் தேதி முதல் தற்போது (ஆகஸ்ட் 5) வரையிலான கடந்த ஏழு மாதத்தில் மட்டும் பவுனுக்கு ரூ.12,072 வரை உயர்ந்துள்ளது.

கரோனா நோய்த்தொற்றின் தாக்கம் காரணமாக, சர்வதேச பொருளாதாரத்தில் மந்தமும், தொழில்துறையில் பெரிய தேக்கமும் ஏற்பட்டது.

இதையடுத்து, உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்கள், பாதுகாப்பான முதலீடாக தங்கத்தைக் கருதி, அதில் முதலீடு செய்யத் தொடங்கினர். இதைத்தொடர்ந்து, தங்கத்தின் தேவை உயர்ந்து, விலை படிப்படியாக அதிகரித்து வந்தது. ஒரு பவுன் ஆபரணத் தங்கம் ஜூலை 22-ஆம் தேதி ரூ.38 ஆயிரத்தையும், 24-ஆம் தேதி ரூ.39 ஆயிரத்தையும், 27-ஆம் தேதி ரூ.40 ஆயிரத்தையும், ஜூலை 31-ஆம் தேதி ரூ.41 ஆயிரத்தையும் கடந்து, புதிய உச்சத்தைத் தொட்டது. இந்நிலையில், சென்னையில் புதன்கிழமை தொடர்ந்து 14-ஆவது நாளாக விலை உயர்ந்தது. பவுனுக்கு ரூ.976 உயர்ந்து, ரூ.42,592-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு கிராம் தங்கம் ரூ.122 உயர்ந்து, ரூ.5,324 ஆக இருந்தது. இதுபோல, வெள்ளி விலையும் மிகப்பெரிய உயர்வை சந்தித்தது. வெள்ளி கிராமுக்கு ரூ.6.60 உயர்ந்து, ரூ.79.20 ஆகவும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.6,600 அதிகரித்து, ரூ.79,200 ஆகவும் இருந்தது.

தங்கம் விலை நிகழாண்டில் ஜனவரி 3-ஆம் தேதி அன்று பவுன் ரூ.30,520 ஆக இருந்தது. அதன்பிறகு படிப்படியாக உயர்ந்து தற்போது (ஆகஸ்ட் 5) வரை கடந்த ஏழு மாதத்தில் மட்டும் பவுனுக்கு ரூ.12,072 வரை உயர்த்துள்ளது. அதிலும், ஜூலை 21-ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 5-ஆம் தேதி வரை மட்டும் பவுனுக்கு ரூ.4,976 வரை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**வரும் நாள்களில் கணிசமாக உயரும்:** தங்கத்தின் விலை உயர்வு குறித்து சென்னை நகை வியாபாரிகள் சங்கத் தலைவர் ஜெயந்திலால் சல்லானி கூறியது: சர்வதேச நாடுகளில் உள்ள மக்கள் தங்கத்தின் மீது பெருமளவில் முதலீடு செய்கிறார்கள். இதனால் தங்கத்தின் விலை சர்வதேச அளவில் உயர்ந்து வருகிறது. அதன் தாக்கம் நமது நாட்டில் எதிரொலிக்கிறது. வரும் நாள்களில் தங்கத்தின் விலை கணிசமாக உயரும் என்றார் அவர்.

# 19 லட்சத்தை கடந்தது கரோனா பாதிப்பு

**புது தில்லி, ஆக. 5:** இந்தியாவில் கரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை புதன்கிழமை 19 லட்சத்தை கடந்தது. தொற்று பாதித்தோர் எண்ணிக்கை 18 லட்சத்தை எட்டி 2 நாள்களே ஆன நிலையில் அது 19 லட்சமாக அதிகரித்துள்ளது.

மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட தகவல் படி, புதன்கிழமை காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் மேலும் 52,509 பேருக்கு கரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து மொத்த பாதிப்பு எண்ணிக்கை 19,08,254-ஆக அதிகரித்தது. ஒரு நாளில் 50,000-க்கும் அதிகமானோருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவது தொடர்ந்து இது 7-ஆவது நாளாகும்.

இந்நிலையில், கரோனா நோய்த்தொற்றால் மேலும் 857 பேர் உயிரிழந்ததை அடுத்து, மொத்த பலி எண்ணிக்கை 39,795-ஆக உயர்ந்துள்ளது. நாட்டில் கரோனா உயிரிழப்பு சதவீதம் 2.09-ஆகக் குறைந்துள்ளது.



அதேபோல், புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் நாடு முழுவதும் 51,706 பேர் கரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

இதையடுத்து குணமடைந்தோர் மொத்த எண்ணிக்கை 12,82,215-ஆக அதிகரித்தது.

இந்தியாவில் கரோனாவிலிருந்து குணமடைவோர் சதவீதம் 67.19-ஆக அதிகரித்துள்ளது. நாடு முழுவதும் 5,86,244 பேர் சிகிச்சையில் உள்ளனர். இது மொத்த பாதிப்பில் 30.72 சதவீதம் ஆகும்.

| பாதிப்பு | பலி | மீட்பு |
|---|---|---|
| 19,08,254 | 39,795 | 12,82,215 |

சிகிச்சை பெற்று வருவோர் - 5,86,244

# கரோனாவுக்கு ஒரு வாரத்தில் 623 பேர் பலி

## தமிழகத்தில் அதிகரிக்கும் இறப்பு விகிதம்

**சென்னை, ஆக. 5:** தமிழகத்தில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 623 பேர் கரோனாவுக்கு பலியானதாக சுகாதாரத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதிகபட்சமாக சென்னையில், 135 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிகிறது.


அதற்கு அடுத்தபடியாக, மதுரை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கோவை ஆகிய மாவட்டங்களிலும் அண்மைக்காலமாக இறப்பு விகிதம் உயர்ந்து வருகிறது.

இதையடுத்து, நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தவும், உயிரிழப்புகளைத் தடுக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது.

உயிரிழப்பு அதிகரித்துள்ள அதேவேளையில் கரோனா தொற்றுக்கு ஆளாவோரின் எண்ணிக்கை ஓரளவு குறைந்து வருகிறது. அதன்படி, புதன்கிழமை மாநிலம் முழுவதும் 61 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பரிசோதனைகள் மேற்கொண்டதில் 5,175 பேருக்கு மட்டுமே நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதில், 80 சதவீதம் பேர் சென்னை அல்லாத பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இதுகுறித்து சுகாதாரத் துறை சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழகம் முழுவதும் இதுவரை 29.53 லட்சம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. அதில், 2 லட்சத்து 73,460 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அதில் கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டவர்களுக்கு தகுந்த சிகிச்சைகள் அளிக்கப்பட்டதன் வாயிலாக இதுவரை 79 சதவீதம் பேர் குணமடைந்துள்ளனர்.



புதன்கிழமை மட்டும் சென்னையில் 1,044 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கு அடுத்தபடியாக, செங்கல்பட்டில் 487 பேருக்கும், திருவள்ளூரில் 472 பேருக்கும், காஞ்சிபுரத்தில் 342 பேருக்கும், தேனியில் 272 பேருக்கும் நோய்த் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அதைத் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் கரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**2.14 லட்சம் பேர் குணம்:** கரோனா தொற்றிலிருந்து குணமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அதன்படி இதுவரை மொத்தம்2 லட்சத்து14,815 பேர் நோய்த் தொற்றிலிருந்து விடுபட்டுள்ளனர்.

புதன்கிழமை ஒரே நாளில் மட்டும் 6,031 பேர் வீடு திரும்பியுள்ளனர். அதிகபட்சமாக சென்னையில் 997 பேர் குணமடைந்ததாக சுகாதாரத் துறை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பிறந்த குழந்தை பலி:** தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 112 பேர் பலியாகியுள்ளனர்.

அதில், 84 பேர் அரசு மருத்துவமனைகளிலும், 28 பேர் தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றவர்களாவர்.

உயிரிழந்தோரில் 8 பேருக்கு கரோனாவைத் தவிர வேறு எந்த நோயும் இல்லை. குறிப்பாக மதுரையைச் சேர்ந்த கரோனா பாதித்த பெண்ணுக்கு பிறந்த, நான்கு நாள் மட்டுமே நிரம்பிய பெண் குழந்தை நோய்த் தொற்றுக்கு ஆளாகி உயிரிழந்தது.

மாநிலம் முழுவதும் இதுவரை கரோனாவுக்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4,461-ஆக உள்ளது.

# பள்ளிகளில் டெங்கு பரவாமல் தடுக்க நடவடிக்கை: முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு உத்தரவு

**சென்னை, ஆக. 5:** பள்ளிகளில் டெங்கு பரவாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாகபள்ளிக்கல்வி இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை விவரம்:

பருவமழைக் காலத்தில் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஎஸ் கொசுக்களை கண்டறிந்து அழிப்பது அவசியம். அதன்படி வாரந்தோறும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் டெங்கு தடுப்பு தினம் அனுசரிக்கப்பட வேண்டும்.

இது தவிர, அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் தீவிர கொசு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். பள்ளியின் வகுப்பறை மற்றும் கழிவறைகளை சுற்றி தண்ணீர் தேங்காமல் பராமரிக்க வேண்டும். அவ்வாறு தண்ணீர் தேங்கியிருப்பின் உடனே அவற்றை அகற்ற வேண்டும்.

பள்ளி வளாகத்தில் கொசுக்கள் முட்டையிட ஏதுவான தேங்காய் ஓடுகள், பழைய டயர்கள், பூந்தொட்டிகள், தட்டுகள், தண்ணீர் தொட்டிகள், பள்ளி கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களில் உள்ள பொருள்களை தொடர்ச்சியாக கண்காணித்து தண்ணீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். தூய்மை பணியாளர்கள் உதவியுடன் பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்தி பள்ளியை சுகாதாரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# காந்திஜி தாயார் தினம்: மாணவ, மாணவிகள் உறுதிமொழி

**சென்னை, ஆக. 5:** சேவாலயா அமைப்பின் சார்பில் மகாத்மா காந்தியின் தாயார் புட்லிபா தினத்தையொட்டி நடத்தப்பட்ட விழாவில் மாணவ, மாணவிகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மகாத்மா காந்தி வெளிநாட்டில் கல்வி பயில செல்லும்போது அவரது தாயாரான புட்லிபாவிடம், 'என் வாழ்நாளில் மது அருந்த மாட்டேன்' என உறுதிமொழி எடுத்து கொண்டார். இதன் நினைவாக திருவள்ளூர் வட்டம் சேவாலயாவில், ஆண்டுதோறும் புட்லிபா தினம் (ஆக.5) கொண்டாடப்படுகிறது.

அதன்படி நிகழாண்டுக்கான நிகழ்ச்சி திருவள்ளூர் மாவட்டம் கசுவா கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் சேவாலயா அமைப்பு, தமிழகம், புதுச்சேரியில் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் இணையவழியில் மூலம் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக மாணவர்கள் தங்கள் தாயாரிடம், 'மதுவைத் தொட மாட்டோம்' என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இதில் சிறப்பு அழைப்பாளராக ஓய்வு பெற்ற ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ராம் மோகன் கலந்து கொண்டு, மதுவின் தீமைகள் குறித்து விளக்கிப் பேசினார். இதைத் தொடர்ந்து மதுவின் தீமைகளை எடுத்துரைக்கும் வகையில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவையொட்டி இணையவழியில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் 19 மாவட்டங்களிலிருந்து 66 பள்ளிகளைச் சேர்ந்த 438 மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

விழாவில் சேவாலயா அமைப்பின் நிர்வாக அறங்காவலர் முரளிதரன், அந்த அமைப்பின் சார்பில் நடத்தப்படும் மகாகவி பாரதியார் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் விஜயா செண்பகம், ஆசிரியர் காஞ்சனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சத்துணவு சாப்பிடும் மாணவர்களில் இதுவரை 30 லட்சம் பேருக்கு அரிசி, பருப்பு விநியோகம்

**சென்னை, ஆக. 5:** தமிழகத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் மாணவர்களில் இதுவரை 30 லட்சத்து 26,692 பேருக்கு அரிசி மற்றும் பருப்பு வழங்கப்பட்டுள்ளது.

கரோனா தடுப்பு மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை காரணமாக, கடந்த பிப்ரவரி மாதம் முதல் பள்ளிகள் மூடப்பட்டன. மீண்டும் பள்ளிகள் எப்போது திறக்கப்படும் என்பது இதுவரை முடிவு செய்யப்படவில்லை.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் மாணவர்களுக்கு சத்தான உணவுடன் வாரத்தின் ஐந்து நாள்களும் முட்டை வழங்கப்பட்டு வந்தது. இதனால் அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குப் போதுமான ஊட்டச்சத்து கிடைத்தது. கடந்த கல்வியாண்டில் ஏப்ரல் மாதம் முழுவதும் பள்ளிகள் மூடப்பட்டிருந்தன. வழக்கமாக, கோடை கால விடுமுறையாக, மே மாதத்தில் பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்படாது.

விடுமுறை முடிந்து ஜூன் மாதம் பள்ளிகள் திறக்கப்படும் என எதிர்பார்த்த நிலையில், கரோனா தொற்று பரவல் காரணமாக இதுவரை பள்ளிகள் திறக்கப்படவில்லை. இந்த நிலையில் மத்திய அரசின் அறிவுரைப்படி, சத்துணவு சாப்பிடும் மாணவர்களுக்கு உலர்ந்த அரிசி மற்றும் பருப்பு மாதம்தோறும் வழங்க வேண்டுமென தமிழக அரசு உத்தரவிட்டது. அதன் அடிப்படையில் தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு சத்துணவுக்கு அளிக்கவேண்டிய அரிசி மற்றும் பருப்புகள் அனைத்தும், சத்துணவுப் பணியாளர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. ஐந்தாம் வகுப்பு வரை தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு மாதத்துக்கு 3.100 கிலோ கிராம் அரிசியும், பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு 4.150 கிலோ கிராம் அரிசியும், அனைத்து மாணவர்களுக்கும் தலா 465 கிராம் பருப்பும் வழங்க வேண்டும்.

தொடக்கப்பள்ளிகளில் பயிலும் சத்துணவு உண்ணும் 20 லட்சத்து 39 ஆயிரத்து 483 மாணவர்களில் 17 லட்சத்து 87 ஆயிரத்து 989 மாணவர்களுக்கும், உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் 14 லட்சத்து 73 ஆயிரத்து 773 மாணவர்களில் 12 லட்சத்து 38 ஆயிரத்து 703 மாணவர்களுக்கும் அரிசி மற்றும் பருப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சத்துணவு சாப்பிடுவோரில் 87 சதவீதம் பேர் பயனடைந்துள்ளனர் என சமூக நலத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அதேவேளையில் சென்னை, காஞ்சிபுரம், மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, விழுப்புரம், விருதுநகர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு அதிகளவில் சத்துணவுப் பொருள்கள் வழங்கப்படாமல் உள்ளதாக பெற்றோர் தெரிவித்தனர்.


**பஞ்சாப் & சிந்த் வங்கி**
(ஓர் இந்திய அரசு நிறுவனம்)
அடையார் கிளை - சென்னை

**வங்கி கிளை மாற்ற அறிவிப்பு**

**பஞ்சாப் & சிந்த் வங்கி, அடையார்- கிளை சென்னை**யின் அனைத்து வாடிக்கையாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், **44/1, 1வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையார், சென்னை-20** எனும் வளாகத்தில் இதுவரை இயங்கி வந்த வங்கியானது, இனி கீழ்குறிப்பிட்டுள்ள புதிய வளாகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**"E 33, 2வது அவென்யூ, RBI குவார்ட்டர்ஸ், பெசன்ட் நகர், சென்னை-600 090".**

மேலும் விவரங்களுக்கு கிளையின் தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும்: 24411508 / 24404042.
**மின்னஞ்சல்:** m0566@psb.co.in

இடம்:சென்னை — **முதன்மை மேலாளர்**
தேதி:04.08.2020 — **பஞ்சாப் & சிந்த் வங்கி**






बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

**பாங்க் ஆப் பரோடா அம்பத்தூர் கிளை**
(முன்பு விஜயா வங்கி, SME கிளை)
(A Govt of India undertaking)

**எங்களது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு**

எங்கள் வாடிக்கையாளர்களுக்கு எங்கள் சேவைகளை ஒருங்கிணைத்து பலப்படுத்துவதற்கான முயற்சியில் மற்றும் சில நிர்வாக வசதிகள் காரணமாக, எண்.3, அம்பத்தூர் பழைய டவுன், S-பார்க் தெரு, வெங்கடபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053 என்ற முகவரியில் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் **பேங்க் ஆப் பரோடா முன்னர் விஜயா வங்கி, SME கிளை, பேங்க் ஆப் பரோடா,** அம்பத்தூர் கிளையில் இணைக்கப்பட்டு 119, MTH சாலை, அம்பத்தூர், சென்னை - 600 053 என்ற முகவரிக்கு மாற்றப்படவுள்ளது. மேலும் **05.09.2020** முதல் குறிப்பிட்டுள்ள முகவரியில் செயல்படும். இது குறிப்பிட்டுள்ள முகவரியிலிருந்து வங்கியின் பொதுவான அனைத்து வகையான வங்கி வணிகங்களை பூர்த்தி செய்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மேலும் எங்களது அம்பத்தூர் கிளையில் பெட்டகம் வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தெரிவிப்பது பெட்டகங்களை குறிப்பிட்டுள்ள முகவரிக்கு மாற்றும்பொழுது மிகுந்த கவனத்துடன் கையாளப்படும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எனினும் மாற்றம் செய்யும் பொழுது தவறுகள் மற்றும் இடையூறுகள் ஏற்படாமல் இருக்க பெட்டகம் வைத்துள்ள வாடிக்கையாளர்கள் **04.09.2020** அன்று அல்லது அதற்கு முன்பு பெட்டகத்தில் உள்ள பொருட்களை தங்களது சொந்த சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டு பெட்டகங்களை குறிப்பிட்டுள்ள முகவரியில் மாற்றம் செய்த பின்பு மறுவைப்பு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த மாற்றத்தினால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாங்கள் மிகவும் வருந்துகிறோம் மற்றும் எல்லா நேரங்களிலும் எங்கள் சிறந்த சேவைகளை உங்களுக்கு உறுதிப்படுத்துகிறோம்.

**இடம் : சென்னை** — **(ராமானுஜ் ஷர்மா)**
**தேதி : 05.08.2020** — **பிராந்திய தலைமை**
**சென்னை மெட்ரோ பிராந்தியம்-II**



**Rane** ரானே பிரேக் லைனிங் லிமிடெட்
CIN: L63011TN2004PLC054948
பதிவு அலுவலகம்: "மைத்ரி", 132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086. Visit us at: www.ranegroup.com

**ஜூன் 30, 2020 முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கை**

ரூபாய் லட்சத்தில்

| வ. எண் | விவரங்கள் | 30.06.2020 அன்றுடன் முடிந்த காலாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத) | 30.06.2019 அன்றுடன் முடிந்த காலாண்டிற்கான (தணிக்கை செய்யப்படாத) | 31.03.2020 அன்றுடன் முடிந்த நிதி ஆண்டிற்கான (தணிக்கை செய்யப்பட்ட) |
|---|---|---|---|---|
| 1. | இயக்கத்திலிருந்து மொத்த வருமானம் (net) | 4,117.66 | 11,891.69 | 48,143.01 |
| 2. | சாதாரண செயல்பாடுகளிலிருந்து வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு முன் லாபம் / (நஷ்டம்) | (995.47) | 937.84 | 4,468.10 |
| 3. | சாதாரண செயல்பாடுகளிலிருந்து வரிக்கு முன் லாபம் / (நஷ்டம்) (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | (995.47) | 937.84 | 4,468.10 |
| 4. | இந்தக்காலத்திற்கான நிகர லாபம் / நஷ்டம் (வரி மற்றும் விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | (689.33) | 733.06 | 3,434.50 |
| 5. | இந்தக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இந்தக்காலத்திற்கான உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் விரிவான வருமானம் (வரிக்கு பின்) | (674.31) | 685.17 | 3,336.49 |
| 6. | பங்கு மூலதனம் | 791.50 | 791.50 | 791.50 |
| 7. | பங்கு ஒன்றுக்கு வருமானம் (EPS) (ரூ.10/- வீதம்) | | | |
| | (அ) அடிப்படை: | (8.71) | 9.26 | 43.39 |
| | (ஆ) நீர்த்த மதிப்பு: | (8.71) | 9.26 | 43.39 |

குறிப்புகள்
1. மேலே உள்ளது 2015-ஆம் வருடத்திய SEBI அமைப்பின் ஒழுங்குமுறை விதிகளின், ஒழுங்குமுறை விதி 33-ன்கீழ் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) பங்குச்சந்தைகளில் தாக்கல் செய்யப்பட்ட, தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் எடுபகுதி ஆகும். இந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் பங்குச்சந்தைகளின் இணையதளங்களான www.bseindia.com, www.nseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com என்ற முகவரியில் கிடைக்கும்.
2. மேலே உள்ள தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு, இயக்குநர்கள் குழுவினால் முறையே 2020 ஆகஸ்ட் 05 அன்று நடைபெற்ற அவர்களுடைய கூட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும் நிதிநிலை அறிக்கை தணிக்கையாளர்களால வரையறுக்கப்பட்ட மறு ஆய்வுக்கு உட்பட்டது.
3. கோவிட்-19 தொற்றுநோய் தீவிர பரவல் விளைவாக இந்திய அரசு அறிவித்த பொதுமுடக்கம் காரணமாக 2020 ஜூன் 30 அன்று முடிவடைந்த காலாண்டில் நிறுவனத்தின் செயல்பாடுகள் காலாண்டின் ஒரு பகுதிக்கு நிறுத்தி வைக்கப்பட்டன. எனவே காலாண்டிற்கான முடிவுகள் முந்தைய காலங்களுடன் ஒப்பிட முடியாது.
4. இந்த நிதிநிலை அறிக்கைகளின் ஒப்புதலுக்கான தேதி வரையிலான உள் மற்றும் வெளிப்புற தகவல்களின் அடிப்படையில் COVID-19 இன் நிதி அறிக்கையின் தாக்கத்தை நிறுவனம் மதிப்பிட்டுள்ளது மற்றும் அருவமான சொத்துக்கள், வர்த்தகம் பெறத்தக்கவை, சரக்குகள் மற்றும் பிற நிதி சொத்துக்களை மீட்டெடுக்க எதிர்பார்க்கிறது. நிறுவனம் எதிர்கால பொருளாதார நிலைமைகளை தொடர்ந்து கண்காணித்து அதன் மதிப்பீட்டை புதுப்பிக்கும்.

ரானே பிரேக் லைனிங் லிமிடெடிற்காக
எல். கணேஷ்
தலைவர்

சென்னை
ஆகஸ்ட் 05, 2020



Repco Home Finance

**ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்**
Asset Recovery **கிளை: மனை எண்.4055, U ப்ளாக், எண்.10, 1-வது தளம், பஞ்சாப் நேஷனல் பேங்க் மாடியில், அண்ணா நகர், சென்னை-600040, போன்: 2628 5959**

**இ - ஏல விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்தினை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்தினை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI ACT) -இன் கீழ் ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் கம்பெனியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை விற்பனை செய்தல்

**கடன்தாரர்: Mr.D.லோகநாதன்,** S/o.C.C.துரை, **சக-கடன்தாரர்-I: Mrs.L.கிரிஜா,** W/o.D.லோகநாதன், **சக-கடன்தாரர்-II: Mrs.D.விஜயலஷ்மி,** W/o.C.C.துரை, **சக-கடன்தாரர்-III: Mrs.V.பாக்யலஷ்மி,** W/o.E.வெங்கடேசன், ஆகியோர் **ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், திருவள்ளூர் கிளையில் (தற்போது கடன் கணக்கு ARB சென்னை கிளைக்கு மாற்றப்பட்டது)** கீழ்கண்ட அசையா சொத்தினை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார்கள். நிறுவனமானது கடன் தொகையான **கடன் கணக்கு எண்.2571820000961-**ன் கீழ் **30.09.2019** அன்றுள்ளபடி **ரூ.23,68,592/-** மற்றும் வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்தக்கோரி SARFAESI சட்டத்தின்படி **24.09.2019** அன்று கோரிக்கை அறிவிப்பு அனுப்பியது.

கடன் பெற்றவர்கள் ACT, விதி 13 (4) படி விடப்பட்ட கோரிக்கைக் கடிதத்தில் கோரப்பட்டுள்ள வங்கிக்கு செலுத்த வேண்டிய முழுக்கடன் தொகையையும் செலுத்தத்தவறியதால் வங்கியானது கீழே குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களை **17.03.2020** அன்று சுவாதீனம் எடுத்துக்கொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து, சொத்தை ஈடாக பெற்றிருக்கும் கடன் கொடுத்தவரான (secured creditor) ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் நிறுவனமானது கடன்தொகையை வசூலிக்கும் பொருட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ள அடமான சொத்தினை **"எங்கே அமைந்துள்ளதோ அங்கேயே அப்படியே" என்ற நிலையிலும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற வகையிலும் ("as is where is" & "as is what is" condition)** SARFAESI ACT 2002 பிரிவு 13(4)-ன் படியும் சொத்து மீதான கடனீட்டு உரிமை (அமலாக்கம்) விதிமுறைகள், 2002, விதி எண் 8 & 9-ன் படியும் விற்பனை செய்ய முடிவெடுத்து கீழ்க்கண்டவாறு அறிவிக்கப்படுகிறது. **கடன்தாரர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை கடன் கணக்கு எண்.2571820000961-**ன் கீழ் **29.07.2020 அன்றுள்ளபடி ரூ.27,45,274/- ஆகும்.**

**இ-ஏல விற்பனை திறக்கப்படும் நாள் / நேரம்: 08.09.2020 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை விற்பனை முடியும் வரை தலா 5 நிமிடங்கள் கொண்ட கால வரையற்ற நீட்டிப்புகள் அனுமதிக்கப்படும்**

**E-டெண்டரை சமர்பிக்கும் கடைசி நாள் & நேரம்: 07.09.2020 மாலை 04.00 மணிக்குள்**

**அசையா சொத்து விபரம்**

ஷெட்யூல்**-A:** சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செம்பியம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, S.எண்.37/2, தற்போது T.S.எண்.36, ப்ளாக் எண்.10, **பெரவள்ளூர் கிராமம், மனை எண்.34, கன்னையா செட்டி இரண்டாவது தெரு, பெரவள்ளூர், செம்பியம் டிவிஷன் என்னும் முகவரியிலுள்ள நிலம்.** எல்லைகள்: வடக்கு: வேணுகோபாலசாமி பக்த ஜன சபா, கிழக்கு: கன்னையா செட்டி கார்டன் தெரு, தெற்கு: விற்பனையாளர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள முத்து மாடசாமி நாடார் வீடு, மேற்கு: விற்பனையாளர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள ராதாகிருஷ்ண நாயுடு விடு, அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 56 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 51 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 42.8 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 34.4 அடி.

**ஷெட்யூல்-B:** வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் செம்பியம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.37/2 பகுதி இணை தொடர்புடைய T.S.எண்.36 பகுதி, ப்ளாக் எண்.10, எண்.66, பெரவள்ளூர் கிராமம் மற்றும் ஷெட்யூல் A-வின் பகுதி சொத்தில் அமைந்துள்ளது. **பழைய கதவு எண்.38/2, புதிய கதவு எண்.22, கன்னையா செட்டி கார்டன் இரண்டாவது தெரு, பெரவள்ளூர் தெரு, பெரவள்ளூர் கிராமம், சென்னை-600 082** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 54 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம் 52 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 22 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம் 25 அடி, **ஆக மொத்தம் 1212 சதுர அடி வீட்டு மனை அதனுடன் இருக்கும் வீடு** மற்றும் சேவை இணைப்புகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: வேணுகோபாலசாமி பக்த ஜன சபா, கிழக்கு: கன்னையா செட்டி கார்டன் இரண்டாவது தெரு, தெற்கு: ஷெட்யூல் "A" சொத்தின் மீதமுள்ள பகுதி, மேற்கு: விற்பனையாளர் நிலத்தில் கட்டப்பட்டுள்ள ராதாகிருஷ்ண நாயுடு வீடு

**குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 1,04,29,000/-; ஏல உயர்வுத்தொகை: ₹ 75,000/-**
**முன்வைப்புத் தொகை (குறைந்தபட்ச கேட்பு விலையில் 10%): ₹ 10,42,900/-**

இ-ஏல நடைமுறைகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: **M/s. C1 India Pvt Ltd., Mr. K.N. Shrinatth – 98404 46485.**
**சொத்துக்களை பார்வையிட, விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏலத்தில் கலந்து கொள்ளும் நபர்கள், கிளை மேலாளர், ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், ARB சென்னை கிளை, தொடர்பு எண்.044 26285959 , 78248 99635 என்ற எண்ணில் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.**

**தேதி: 31.07.2020** — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்



Fullerton Grihashakti
Iraada hai toh Raasta hai

**FULLERTON INDIA HOME FINANCE COMPANY LIMITED**
**பெருநிறுவன அலுவலகம் -** தளம் 5 & 6, B விங், சுப்ரீம் IT பார்க், சுப்ரீம் சிட்டி, போவாய், மும்பை- 400076
**பதிவு அலுவலகம் -** மேக் டவர்ஸ், தளம் 3, பழைய எண். 307, புதிய எண்.165, பூந்தமல்லி நெடுஞ்சாலை, மதுரவாயல், சென்னை – 600 095.

**கோரிக்கை அறிவிப்பு**

**பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 ("சட்டம்") மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ("விதிகள்") ன் கீழான ஏற்பாடுகளின் கீழ்**
இதன் கிழ்க்கையொப்பமிட்ட நபர், **"ஃபுல்லர்டோன் இந்தியா ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்" ("FIHFCL")** - ன் அதிகாரப்பூர்வ அலுவலராக, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) - உடன் படிக்க – மேற்சொன்ன விதிகளில் விதி 3 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி, மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு(களை) வழங்கி, அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள தொகைகளை மேற்சொன்ன அறிவிப்புகளை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்தக்கோரி பின்வரும் கடன்தாரர்(களுக்கு) அழைப்பு விடுத்தார். கடன்தாரர்/கள் மேற்சொன்ன கோரிக்கை அறிவிப்பு(களை) பெறுவதனை தவிர்த்து வருகிறார்கள் என கிழ்க்கையொப்பமிட்ட நபர் நம்புவதில் நியாயம் இருக்கிறது. அதனால், விதிகளின் படி, அறிவிப்புகளை ஒட்டியும், பிரசுரித்தும் சார்வு செய்யப்படுகிறது. கோரிக்கை அறிவிப்பு(களின்) விபரங்கள் இதன் கீழ் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | கடன்தாரர் / கூட்டு கடன்தாரர்கள் / சொத்து வைத்திருப்பவர்கள் (எது பொருந்துமோ அது) பெயர் மற்றும் முகவரி | பிரிவு 13(2) ன் கீழான கோரிக்கை அறிவிப்பு தேதி & மொத்த நிலுவைத்தொகை | ஜாமீன் சொத்துக்கள் / அடமான சொத்து விபரம் |
|---|---|---|---|
| 1 | **1. கடன் கணக்கு எண். 603607510113859 மற்றும் 603607210104500**<br>**1. திரு. மணி M.S., த/பெ. ஸ்ரீ ராம வீரபத்ர சிரஞ்சீவி ராவ், 2. திருமதி. ராம்பள்ளி சூர்யலட்சுமி பவானி, க/பெ. மணி,**<br>**முகவரி 1 -** ஃப்ளாட் எண்.B-2, ப்ளாக் எண். C-2, முதல் தளம், ''சாய் சரண் அவென்யூ'', ஜவஹரையா நகர், கூடுவாஞ்சேரி, சென்னை, தமிழ்நாடு - 603 202<br>**முகவரி 2 -** ஃப்ளாட் எண்.B-2, ப்ளாக் எண். C-2, முதல் தளம், ''சாய் சரண் அவென்யூ'', ஜவஹரையா நகர், ஆதனூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு - 603 202<br>**முகவரி 3 -** எண். C-2, முதல் தளம், ''சாய் சரண் அவென்யூ'', ஜவஹரையா நகர், கூடுவாஞ்சேரி, சென்னை, தமிழ்நாடு - 603 202 | **27.07.2020**<br>**ரூ. 25,40,519.12/- (ரூபாய். இருபத்து ஐந்து இலட்சத்து நாற்பதாயிரத்து ஐனூற்று பத்தொன்பது மற்றும் பைசா பன்னிரண்டு மட்டும்)**<br>**செயல்படாத சொத்தாக பகுக்கப்பட்ட தேதி - 31.03.2020** | காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, ஆதனூர் கிராமம், சர்வே எண். 362(பகுதி), ஜவஹரையா நகரில் அமையப்பெற்று, CSAR/DTCP-M. No. 86/128LP/103 ன் படி அங்கீகரிக்கப்பட்டதில் உள்ள 2910 சதுர அடி அல்லது 270.345 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட **''சாய் சரண் அவென்யூ''** வின் ப்ளாக் எண். C-2, முதல் தளத்தில் உள்ள 682 சதுர அடி பரப்பளவுடன் கூடிய ஃப்ளாட் எண். B-2 மற்றும் கடை எண். C ல் உள்ள 307 சதுர அடியில் உள்ள பிரிபடாத பங்கு இடம் ஆகியன உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்.<br>**எல்லைகள் -** 40 அடி சாலைக்கு - வடக்கு , T.T.C.E. நகருக்கு - தெற்கு, கடை எண். D க்கு - கிழக்கு, கடை B க்கு - மேற்கு<br>**அளவீடுகளாவன : கிழமேல் வடபுறம்** - 60 அடி, **கிழமேல் தென்புறம்** - 60 அடி, **தென்வடல் கிழபுறம்** - 48 அடி 6 இன்ச், **தென்வடல் மேற்கு புறம்** - 48 அடி 6 இன்ச். இது, கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. |
| 2 | **கடன் கணக்கு எண். 603607510181017 மற்றும் 603607510416027**<br>**1.திரு. ராம மூர்த்தி N, த/பெ. நடராஜன், (சட்ட ரீதியான வாரிசுகள் அய்யப்பா மற்றும் அனுசுயா ஆகியோரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது)**<br>**2. திரு. R. அய்யப்பா, த/பெ. ராம மூர்த்தி**<br>**3. அனுசுயா R, த/பெ. ராமமூர்த்தி**<br>**4. ஓம் ஸ்ரீ தேவி ஃப்ரூட் ஸ்டால்**<br>**5. ராம மூர்த்தி N (காலமானதால்) அவர்களின் மகன் / மகள்** மற்றும் இதர தெரிந்த மற்றும் தெரியாத சட்ட ரீதியிலான வாரிசு(கள்), பின்தொடர்ச்சியாளர்கள், பணியமர்த்தப்பட்டவர்கள் ஆகியோர்.<br>**முகவரி 1 :** எண். 7, சன்னதி தெரு, கொளத்தூர், கங்கா தியேட்டர், சென்னை, தமிழ்நாடு - 600 099<br>**முகவரி 2 :** எண். 7, சன்னதி தெரு, கொளத்தூர் விநாயகர் கோவில், சென்னை, தமிழ்நாடு - 600 099<br>**முகவரி 3 :** எண். 1, 1 வது தெரு, சிவ பார்வதி நகர், கொளத்தூர், கங்கா தியேட்டர், சென்னை, தமிழ்நாடு - 600 099 | **27.07.2020**<br>**ரூ. 59,54,969.68/- (ரூபாய். ஐம்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஒன்பது மற்றும் பைசா அறுபத்து எட்டு மட்டும்)**<br>**செயல்படாத சொத்தாக பகுக்கப்பட்ட தேதி - 31.03.2020** | சென்னை மாவட்டம், வட சென்னை பதிவு மாவட்டம், செம்பியம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமையப்பெற்று, புரசைவாக்கம் - பெரம்பூர் தாலுக்கா, கொளத்தூர் கிராமம், சர்வே எண். 87, டவுன் சர்வே எண். 7 ல் ஆவணத்தின் படி, 1251 சதுர அடி (அளவீட்டின் படி 1066 சதுர அடி) பரப்பளவுடன், சன்னதி தெரு, கதவு எண்.7 ல் உள்ள இடம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்.<br>**எல்லைகள் -** வடக்கு - வாசுதேவனுக்கு சொந்தமான சொத்து, தெற்கு - கதவு எண். 8, கிழக்கு - குளம், மேற்கு - சன்னதி தெரு.<br>**அளவீடுகள் - வடபுறம் -** 54 அடி, **தென்புறம் -** 54 அடி, **கிழபுறம் -** 20 அடி, **மேற்கு புறம் -** 18 அடி 6 இன்ச். ஆவணத்தின் படி 1251 சதுர அடி (அளவீட்டின் படி 1066 சதுர அடி) பரப்பளவு கொண்ட இடம் மற்றும் கட்டிடம் ஆகியன. |
| 3 | **கடன் கணக்கு எண். 603607210477832**<br>**1. திருமதி. பிச்சி P, க/பெ. லேட், திருப்பதி,**<br>**2. திரு. அஷ்வின் T, த/பெ. லேட், திருப்பதி,**<br>**3. திரு. ஆகாஷ் T, த/பெ. லேட், திருப்பதி,**<br>**4. விநாயகா ஏஜென்சீஸ்,**<br>**முகவரி 1 :** கதவு எண். 134, 1 வது குறுக்கு தெரு, ஸ்ரீ கஜலட்சுமி நகர், சின்ன நொளம்பூர், மதுரவாயல், சென்னை–600 095<br>**முகவரி 2 :** ப்ளாட் எண். 129, சர்வே எண். 185 & 186, பட்டா எண். 3113, மதுரவாயல் தாலுக்கா, நொளம்பூர் கிராமம், திருவள்ளூர் மாவட்டம் - 600 095<br>**முகவரி 3 :** எண். 9, ஸ்ரீ கஜலட்சுமி நகர், நொளம்பூர், மதுரவாயல், சென்னை – 600 095 | **27.07.2020**<br>**ரூ. 50,57,939.71/- (ரூபாய். ஐம்பது இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஒன்பது மற்றும் பைசா எழுபத்து ஒன்று மட்டும்)**<br>**செயல்படாத சொத்தாக பகுக்கப்பட்ட தேதி - 31.03.2020** | சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, நொளம்பூர் கிராமம், சர்வே எண். 185 & 186, பட்டா எண். 3113 ல் அமையப்பெற்ற, ஸ்ரீ கஜலட்சுமி நகர் லே அவுட்டில் உள்ள 1200 சதுர சதுர அடி மொத்த பரப்பளவு கொண்ட ப்ளாட் எண். 129 மற்றும் திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் தாலுக்கா, நொளம்பூர் கிராமம், பட்டா எண். 3113 ன் படி, சர்வே எண். 186/74 ல் அமையப்பெற்ற 1200 சதுர சதுர அடி மொத்த பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்.<br>**எல்லைகள் -** ப்ளாட் எண். 127 க்கு - **வடக்கு,** 20 அடி சாலைக்கு - **தெற்கு,** ப்ளாட் எண். 128 க்கு - **கிழக்கு,** ப்ளாட் எண். 130 க்கு - **மேற்கு**<br>**அளவீடுகள் - கிழமேல் வடபுறம் -** 30 அடி, **கிழமேல் தென்புறம் -** 30 அடி, **தென்வடல் கிழபுறம் -** 40 அடி, **தென்வடல் மேற்கு புறம் -** 40 அடி., ஆக மொத்தம் 1200 சதுர அடி. இச்சொத்து, கொன்னூர் சார் பதிவு மாவட்டம், வட சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. |

கோரிக்கை அறிவிப்பு(களுக்கு) கட்டுப்பட்டு, அதில் குறிப்பிட்டு கோரப்பட்டுள்ள தொகைகளை பொருந்தத்தக்க வட்டி, கூடுதல் வட்டி, அபராத கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் சேர்த்து இந்த பிரசுரத்திலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்த மேற்சொன்ன கடன்தாரர்(களுக்கு) இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.
